தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காம் கூட்டத் தொடர்

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 2

தை 20, துன்மதி-திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல்
புண் என்று உணரப்படும்.''

ஒருவனுடைய கண்ணிற்கு அழகு தரும் அணிகலன் கருணை நிறைந்த நோக்கமாகும். இந்த அணிகலனைப் பெறாத கண்கள் புண் என்றே கொள்ளப்படும்.

1. இரங்கற் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை, திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர், முன்னாள் அமைச்சரும் மேலவை உறுப்பினருமான டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் 7—11—1981 ஆம் தேதியன்றும், திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர் அவர்கள் 22—11—1981 ஆம் தேதியன்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் அவர்கள் 17—10—1981 அன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் இரு முறை சென்னை நகரம்-பெரம்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவர் பல்வேறு தொழிற்சங்கங்களில் பணிபுரிந்து தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தார்.

[பேரவைத் தலைவர்] [1982 பிப்ரவரி 2

திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரவர்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் அவர்கள் சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, 1—4—1952 முதல் 30—9—1953 வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 10—4—1952 முதல் 30—9—1953 வரை திரு இராஜாஜி அவர்களின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், முன்னாள் அமைச்சரும், உறுப்பினருமான திரு. கக்கன் ஆகியோர் மறைவு (தீ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் பொது உடைமை (மார்க்சிஸ்ட்) கட்சி பொலிட்பீரோ உறுப்பினராக இருந்தவரும், ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியுமான திரு. ஏ. பாலசுப்ரமணியம் அவர்கள் 5—9—1981 அன்று காலமான செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், பத்து ஆண்டுகள் தமிழ்நாட்டில் அமைச்சராக இருந்தவருமான திரு. கக்கன் அவர்கள் 23—12—1981 அன்று மறைந்ததை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.